சகல விதமான பள்ளிக்கூடப் புஸ்தகங்களுக்கும், இதர நூல்களுக்கும் உபகரணங்களுக்கும் உன்னதமான நிலையம்.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

இந்துசாதனம்

செவ்வாய், வெள்ளி தோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலைமதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்,
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

Registered as a Newspaper in Ceylon
P. M. G. No. H. A. 19/300 of 1939

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் திகதி ஆரம்பமானது.

வெளிவந்துவிட்டது ... ... வெளிவந்துவிட்டது

"ஆரோக்கியமும் தேகப்பயிற்சியும்"

ஆக்கியோன்:
உடு. V. M. சபாரத்தினசிங்கம் B.A.
நான்காம், ஐந்தாம் வகுப்புகளுக்குரியது
விலை ரூபா 1.
எல்லாப் புத்தகசாலைகளிலும், சைவப்பிரகாச யந்திரசாலையிலும் பெறற்பாலது.
[Std. 46. 2-4—30-4-49.]

[புத் — ௬௦] யாழ்ப்பாணம்:— சர்வதாரி ௵ தை ௴ ௨௬ ௳ (1949 பெப்ரவரி 8 செவ்வாய்க்கிழமை) [இல. — ௮௨.]

திருவள்ளுவர் நூற்பொருளை எடுத்தாண்ட சங்கப் புலவர்கள்

:: வித்துவான் :: க. வேந்தனார் அவர்கள்

திருவள்ளுவர் அருளிய திருக்குறளை தமிழ்மக்களின் அறிவுச் செங்கதிராக அலர்ந்து விளங்கும் அழியாச்செல்வமாகும். திருக்குறளின் பொருளமைப்புத் தெளிவும சொல்லாற்றலும் மிகமிகப் பாராட்டற்பாலன. பொருட்கரு நிரம்பிய தூயதெளி தமிழ்ச்சொற்களால் ஒட்பமுற் றிட்பமும் கவின ஆக்கப்பெற்ற திருக்குறட் பாக்கள் திருவள்ளுவரின் நுண்மாண் நுழைபுலச் செவ்வியையும், தமிழ்மொழியின் மொழியாக்கத் திறனையும நன்கு விளக்குகின்றன. குறட்பாக்களில் உள்ள ஒவ்வொரு சொற்களும் ஆக்கியோன் கருதிய பொருளை அப்படியே இறுகப் பிணித்து, உயிர்த தோய்வுடன் நின்று ஒளிர்கின்றன. ஓர் குறட்பாவில் உள்ள சொற்களில் ஒன்றினை எடுத்துப் பின், அப்பொருள குறித்த பிறிதோர் சொல்லினை அவ்விடத்துப் புகுத்திக் குறளை நிரப்பமுடியாத வகையில் மிக விழிப்புடனும் புலமை ஆய்வுடனும், வள்ளுவர்தமது பெருநூலாகிய திருக்குறளை ஆக்கியுள்ளார்.

தமிழ் கூறு நல்லுலகம்

இத்தனை விழுமிய திருக்குறளெனும் பெருநூலினைத் தன்தனி உரிமையாகப் பெற்ற தமிழ்மொழியின் இலக்கண இலக்கியச் சிறப்பும், மொழியாக்கத்தொன்மையும், எத்தனை ஆயிரம் நூற்றாண்டுகளாக உலகின்கண் நிலவிப் பயின்று "படர்சான்றபுலநெறிவழக்கில்" இடம் பெற்றதென்னும் வரலாற்றுக்கும் அப்பாற்பட்ட தொன்மை நிலை தெளியப்படும். திருக்குறள் போன்ற ஓர் தனிப்பெரும் நூல் தோன்றி நிலைபெறுதற்கான சொற்செட்டமும் பொருளுணர்ச்சியும் நிரம்பப்பெற்ற தமிழ்மொழியினை தமதரும்பெருந் தாய் மொழியாகக் கொண்ட தமிழுமக்கள் மிகப் பழங் காலத்திலிருந்தே அறிவொழுக்கச் செயல்களில் மேம்பட்டவராய்ச் சிறந்து விளங்கினரென்பதேற்றம். ஏனெனில் மக்களவாழ்க்கை, திட்பங் கொண்ட நினைவுகளாலும், செயல்களாலுமே என்றும் மாட்சிமைவாய்ந்து நிலவுகின்றது. உயிர்வகைகள் எல்லாவற்றுள்ளும் மிகவுயர்ந்த பிறப்பெனப்படும மக்களுக்குச் சிறப்புரிமையாக விளங்குவது அம்மக்கள் ஒருவரோடொருவர் கலந்துரையாடிக் கருத்துணர்தற்குரிய பேச்சமைப்பேயாகும். நினைவு செயல் மொழியெனும் மூன்றனும் மொழி நடுவில் நின்று ஏனையிரண்டினையும், செம்மைப்படுத்தி வருகின்றது. திருவள்ளுவரின் உள்ளத்தில் திருக்குறட்பொருள் கருக்கொண் டெழுதற்கேற்ற நினைவுகளுஞ் செயல்களும் வழிவழியாகத் தமிழ்நாட்டில்—தமிழ் கூறு நல்லுலகத்தில் வாழ்ந்துவந்த தமிழ்மக்களின் வாழ்க்கை நெறிப்பாடுகளேயாகும். அவ்வுயர்ந்த தமிழ்மக்களின் வழிவந்த வாழ்க்கை நெறிப்பாடுகளை நிலைக்களனாக வைத்து, "உலகத்தார் உள்ளுவதெல்லாம் ஓர்ந்துணர்ந்த வள்ளுவ"ரின் அறிவுப் பயனை வையத்தார்க்கு வாரி வழங்கிய பெருமை தமிழ்கூறு நல்லுலகத்தார்க்கே உரிய தனிச்சிறப்பாகும்.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

எனக் கூறித் தமிழ்நாட்டின் பெருமையை விளக்குகின்றார், அமரகவி பாரதியார்.

உயிருணர்விற் கலக்கும் பொருட் செறிவு

இனியித் திருக்குறள் நூலினை நன்கு பயின்று திருத்தமான மொழியாற்றலுடையாராய்த் தெளிந்த நினைவுகளும் சிறந்த செயல்களும வாய்க்க பெரும் புலவர்கள், தம்மால் ஆக்கப்பெறும் நூல்களிலெல்லாம் திருக்குறட் கருத்துக்களை எடுத்தாண்டிருக்கின்றனர். வள்ளுவர் தமது குறட்பாக்களில் அமைத்துள்ள சொற்களின் பொருட்செறிவும், தெளிவும் அவற்றைப் பயில்வாருள்ளத்தைப் பிணித்து, அவர்களின் உயிருணர்விற் கலந்துவிடும் ஆற்றல் வாய்ந்து விளங்குவன. அதனால் அச் சொற்களை அறிந்தபின் அப்பொருள் குறிக்கும் வேறொரு சொல்லினை எடுத்தாளும் செயல் எத்துணைப் பெரும் புலவர்க்கும் முடியாத தொன்றாகும். வள்ளுவனுக்குப் பிற்பட்ட புலவர் பெருமக்கள் எல்லோரும் தாமாக்கிய நூல்களில் வள்ளுவரருளிய குறட்பாச் சொற்களைச் சிதையாதெடுத்தாண்டிருக்குஞ் செயலொன்றே இதற்குச் சான்றாகும். "செறுத்த செய்யுட்செய் செந்நாவின் வெறுத்த கேள்விவிளங்குபுகழ்க்கபிலன்" முதலிய சங்கப் புலவர்களும் வள்ளுவர் குறட்பாக்களை எடுத்தாண்டிருக்கின்றனர். ஆராய்ச்சி மாணவர்களுக்குப் பயன்படுமாறு அவற்றை இக்கட்டுரையில் எடுத்து விளக்குகின்றோம்.

1. கபிலர் பாட்டு நற்றிணை 32

"மாயோ னன்ன
மால்வரைக் கவாஅன்
வாலியோ னன்ன
வயங்குவெள் ளருவி
யம்மலை கிழவோன்
நந்நயந் தென்றும்
வருந்தின னென்பதோர்
வாய்ச்சொற் றேறாய்
நீயுங் கண்டு
நுமரொடும் எண்ணி
அறிவறிந் தளவல்
வேண்டும் மறுதரற்
கரிய வாழி
தோழி பெரியோர்
நாடி நட்பி னல்லது
நட்டு நாடார்தம்
மொட்டியோர் திறத்தே"

என்பது பாட்டு. பாங்கியிற் கூட்டத்துத் தலைமகனுக்குக் குறைநேர்ந்த தோழி, தலைவியை மெலிதாகச் சொல்லிக் குறையறிவுறுத்தலும், அவள் அறியாள்போலுதலின் வலிதாகச் சொல்லிக் குறையுயப்பிக்கத்தொடங்கி, "அத்தோன்றல்படும் துன்பத்தை யான் கூற நீ தெளிகின்றிலை. எனவே உசாவுவதையொழித்து, நீயும் அவனை நோக்கி நின்மாட்டு அன்புடைய தோழியரோடும் ஆராய்ந்து அறிவினால் இது தகும் இது தகாதென் பதை அறிந்து பின்னர் அளவளாவுதல்வேண்டும்............" "அறிவுள்ள சான்றோர் நட்பாடலைத்து நட்புக்கொள்ள விரும்பினாராயின் முன்னர் அவருடைய குணச் செய்கைகளின் நுணுமையை ஆராய்ந்து நட்புக் கொள்ளுவதல்லது, நட்புச் செய்து பின்பு ஆராய்ந்து பாரார்" எனக் கூறுகின்றாள். கபிலர் எடுத்தாண்ட இப்பொருள்,

"நாடாது நட்டலிற்
கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு"

எனும் திருக்குறட் பாவின் கருத்தைத் தழுவி நிற்றல் காண்க.

நற்றிணை 1-ம் பாட்டு

"நின்ற சொல்லர் நீடுதோன்
றினிய
ரென்று மென்றோள் பிரிபறி
யலரே
தாமரைத் தண்டா தூதி
மீமிசைச்
சாந்திற் றொடுத்த தீந்தேன்
போலப்
புரைய மன்ற புரையோர்
கேண்மை
நீரின் றமையா உலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந்
தருளி

தொடர்ச்சி 4-ம் பக்கம்

பர்மாசீயத்திலிருந்து 90,000 தொன் அரிசி

இம்மாத இறக்குமதியில் அபிவிருத்தி

பர்மா, சீயம் ஆகிய இரு இடங்களிலிருந்தும் குறிப்பிடப்பட்ட திட்டத்தின்படி கப்பல்கள் இலங்கைக்கு வந்து சேரும்பட்சத்தில்,சுமார் 90,000 தொன் அரிசி வரையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றிலிருந்து, சுதந்திர வாரத்திற்கெனக் கூட்டிக் கொடுக்கப்பட்ட ஒன்றேமுக்கால் படி, ஒன்றரைப்படியனவாக மாற்றப்பட்டுள்ளது. இதில் கால் படி அரிசி மட்டும் கட்டுப்பாட்டு விலைக்குப் புறம்பான விலையில் விற்கப்படும்.

பர்மாவில் நடைபெறும் உள்நாட்டுச் சச்சரவுகள் காரணமாகச் சில சமயங்களில் பர்மாவிலிருந்து இலங்கைக்குக் கிடைக்கவிருக்கும் அரிசி விநியோகத்துக்குத் தடை ஏற்படலாம். ஆனாலும் அதற்கு ஆதாரமான தகவல்கள் ஒன்றுமே கிடைக்கவில்லை.

எதிர்பார்க்கப்படும் அரிசி கிடைக்கும் பட்சத்தில், இலங்கை உணவுப் பொருள் விற்பனவுப் பகுதியினரால் ஒரு லக்ஷத்திக்கு மேற்பட்டவர்களுக்குத் தினமும் உணவு விற்பனை செய்ய முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலிய மாவு

இம் மாதத்தில் அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு 27,000 தொன் கோதுமை மாவு கிடைக்கலாம் என நம்பப்படுகிறது. இம் மாதம் 20-ம் திகதி வரையில், அங்கிருந்து 9,000 தொன் மாவுடன் ஒரு கப்பல் வரலாம். இன்னும் இரு கப்பல்களும் மாத முடிவுக் கிடையில் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திருப்பழனத் தலச்சிறப்பு

காவிரி வடகரைத் தலங்களில் ஐம்பதாவது தலமாக இது எண்ணப்பட்டுள்ளது. திருவையாற்றுப் பெருமான் உலாக்கொண்டருளும் ஏழுதலங்களுள் இதுவும் ஒன்று. சுவாமி ஆபத்சகாயர், அம்மை பெரியநாயகி தலம் திருவையாற்றிலிருந்து கிழக்கே இரண்டரை நாழிகை அளவில் விளங்குகின்றது. அப்பூதியடிகள் அவதரித்த திங்களூர் என்ற தலம் இதன் வடபால் ஒரு நாழிகை யளவில் உள்ளது. அப்பர் சுவாமிகள் திங்களூரைத் தரிசித்தற்கு முன்னொரு முறையும் மீண்டு வருங்கால் ஒருமுறையுமாக இருமுறை பெருமானை வணங்கியதாக அவர்கள் வரலாறு அறிவிக்கின்றது. இரண்டாம் முறை வணங்கிப் பாடியபோதுதான் தமது பதிகத்தின் இறுதிப்பாடலில் 'அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி குஞ்சிப்பூவாய் நின்ற சேவடியாய்க் கோடியையே' என்று சிறப்பித்துப் பாடியுள்ளார். 'வாளைபாய் புனற்பழனத் திருப்பழனம்' என்று சேக்கிழார் குறித்துள்ளார். சம்பந்தசுவாமிகள் திருப்பதிகமும் அப்பர் சுவாமிகள் திருப்பதிகமும் பெற்றது இத்தலம்.

வேதமோதி வெண்ணூல்பூண்டு
வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார்
புலியினுரிதோலார்
நாதாவெனவு நக்காவெனவு
நம்பாவெனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார்
பழனநகராரே. —சம்பந்தர்.

சொன்மாலை பயில்கின்ற
குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு
பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள்
முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பனென்
புதுநலமுண் டிகழ்வானோ.
—அப்பர்.

மாணவிக்குத் தீங்கிழைத்தான்

17 வயசுப் பையனுக்கு 6மாதக் கடுங்காவல்தண்டனை

யாழ்ப்பாணம் கரையூரைச் சேர்ந்த செபஸ்தியான் சவுந்தர நாயகம் என்னும் 17 வயதுப்பையன், பாடசாலையிலிருந்து வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்த மாணவியைத் தொட்டு அடித்த குற்றத்துக்காக, ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை பெற்றான். அவனுக்குத் தண்டனை விதித்த நீதிபதி, "யாழ்ப்பாணத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் பாடசாலைக்குப் போகிறார்கள். இப்படிப்பட்ட ஒருவன் அவர்களுக்குப் பயங்கரமானவன்" என்று கூறினார்.

ஒரு சைக்கிள் வண்டியின் முன் 'பார்' இல் இருந்தபடியே, வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த அம்மாணவியின் வலத்தோளில் அடித்து, அவள் பக்கத்திலே விழுந்துவிடக்காரணமாயிருந்தான் என்று செபஸ்தியான் சவுந்தர நாயகம் குற்றஞ்சாட்டப்பட்டான்.

திருநெல்வேலி சமூக சேவா நிலையம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் சுதந்திரதினத்திலன்று சமூகசேவா நிலையம் ஒன்று நல்லூர் கிராமச்சங்கத் தலைவரால் திறந்துவைக்கப்பட்டது. அந் நிலையத்தை ஆரம்பித்து வைப்பதற்காக அரும்பாடுபட்ட கிராமச்சங்க உபதலைவர் திரு. பூரணலிங்கம் அவர்களையும், அவரோடு ஒத்துழைத்தவர்களையும் பாராட்டி, திறப்பாளர் திறப்பு விழாவின்போது பேசினார். இலவச வாசிகசாலை, புத்தகசாலை, இராப்பாடசாலை என்பன அந் நிலையத்தில் நடைபெறுதற்கான ஒழுங்குகள் இப்பொழுது செய்யப்பட்டுள்ளன.

உ

தோத்திரம்

நகுமானை யேந்தருண நம்பா பிறப்பிற்
புகுவேனைக் காக்கும் புனிதா—தகுமேனைப்
பெற்றதுணை நீயல்லாற் பேருலகில் நாயேனுக்
குற்றதுணை மற்றியாவர் ஓது.

ஒலிசெய்கின்ற மான்கன்றைத் திருக்கரத்திற் பரித்த திருவண்ணாமலைப் பெருமானே! பிறவி யெடுத்தலில் ஈடுபட்டிருக்குந் தமியேனை அப்பிறவியுட் புகவொட்டாது காத்தருளும் தூயவரே, தேவரீருடைய திருவருளுக் குரிய என்னைப் பெற்ற துணைவர் தேவரீரே யல்லாமல், இந்தப்பெரிய உலகத்திலே நாயிற் கடைப்பட்ட அடியேனுக்கு வேறு எவர் உறுதியான துணைவராவார், சொல்லுக என்பது பொருள்.

நகுதல்-ஒலித்தல்; ஒலியாகிய நாதமே இறைவனுடைய திருக்கரத்தில் மான்கன்றாக அமைந்ததென்க; இதன் வரலாற்றைக் கந்தபுராணம் ததீசியுத்தரப் படலத்திற் காண்க; புனிதன்-மலமற்றவன், பாசத்தை நீக்கி உயிர்களைப் புனிதப்படுத்தவோன்; தகுமேனை - திருவருளுக்கு உரியவனாகிய என்னை; யாவர் என்ற வினா எதிர்மறைப்பொருளில் வந்தது; யாருமில்லை யென்றபடி. அண்ணாமலையப்பனே! பிறவிப்பெருங்கடலை நீந்தவறியாது கிடந்து இடர்ப்படுவேனுக்குத் தேவரீரே யொழிய உறுதுணை வேறெவருமில்லையென இறைவனுக்கு முறையிட்டவாறும். (20)

நோய்தரும் உணவு

(டக்டர் கே. எஸ். பரிபூரணானந்தா)

நமது உடலை நல்ல நிலையில்வைத்துக் காப்பாற்றவே நாம் உண்கின்றோம். உணவின்றி உயிர்வாழ முடியாது. ஆனால் நமது தேவைக்கேற்ற முறையில் நாம் உணவை உண்ணாமல் அதிகமாகவே உண்ண விரும்புகிறோம், அத்துடன் நில்லாமல் அதிகமான காரசாரங்களையும் சரக்கு வகைகளையும் அளவுக்கதிகம் உபயோகிக்கப் பழகிக் கொண்டுள்ளோம். மல்லி, மிளகாய், சீரகம், வெந்தயம் முதலிய சரக்கு வகையில் யாதாமொரு சத்தும் கிடையாவிடினும் அவை மருந்தாக உணவின் குற்றங்களை அகற்ற மட்டும் உதவுகின்றன. இந்த நோக்கத்தை அறவே மறந்து நாம் நாவுக்கு இதந்தேடுவார்போல் மட்டுக்கு அதிகமான சரக்கு வகைகளை உணவுடன் சேர்த்து நாவின் உணர்ச்சியையும் கெடுத்து வருகின்றோம். நாம் உணவை உண்பதும் அனேகமாய்ப் பசிக்கல்லாமல் வாய்க்கிதந் தேடியேயாம். அங்ஙனந் தேவைக் கதிகமான உணவை உண்பதால் வயிற்றில் சீரணமாக முடியாமல் அவ்வுணவே நமக்கு நஞ்சாக மாறுகின்றது. இந்த நிலைமையில் நாம் போய்க்கொண்டிருப்பின் நமது தேகத்தில் பலவித நோய்கள் குடிகொண்டு விடுகின்றன.

நம் சீவியத்தில் பணஞ் சம்பாதிக்கவேண்டி எதையுஞ் செய்யத் துணிகின்றோம். நம் குடும்பத்திற்குப் போதிய உணவைச் சேகரிப்பதற்காக இரவும் பகலும் உழைப்பில் கருத்தைச் செலுத்துகிறோம். அங்ஙனம் பாடுபட்டுத் தேடிய உணவை வீணாக்காது கணக்கறிந்து உண்கிறோமா? உணவைத் தேடப் படும் பிரயாசை ஒருபுறமிருக்க இங்ஙனந் தேடப்பட்ட உணவுப் பொருள்களைக் கொண்டு மணங் குணமாகப் பாகம் செய்வதில் மனையாள் படுங் கஷ்டம் இதனிலும் அதிகம்.

சத்தான உணவை அறிந்து தேகத்தை வலுப்படுத்தவும் ஆரோக்கிய நிலையில் வைக்கவும் நாம் உணவை உண்பதில்லை, நாவுக்குச் சுவையுள்ளதாய் மட்டும் இருந்தால் போதும், நமது குடல் இனி ஏற்க முடியாத நிலையில் இருந்தாலும் பின்னும் சிறிது உண்ண நாம் தயாராயிருக்கின்றோம்.

இந்த முறையில் உலகில் அனேகர் போய்க்கொண் டிருப்பதாற்றான் இறந்தவர்களின் தொகையில், பட்டினியால் இறந்தவர்களைக் காட்டிலும் அதிக உணவை உண்டு அதனால் அவ்வுணவு நஞ்சாகி நோய்தந்து அதன் காரணமாக இறந்தோர் தொகை அதிகமெனக் கணக்கிடப்பட் டிருக்கிறது. இந்த உண்மை எவராலும் மறக்கமுடியாததொன்றாகும்.

விருந்துணவு

இப்பொழுது விருந்தென்றால் வயிறு புடைக்க உண்டு ஆனந்திப்பதென்று எண்ணும்படியான வழக்கமாயிற்று. நமது ஆப்த நண்பர்களை அழைத்து விருந்து கொடுத்து மறுநாள் அவர்கள் மருந்துண்ணும் காட்சியை விருந்து கொடுத்தவர் காணவும் நேரிடுகின்றது.

தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் விஷயத்திலும் மட்டுக்கு மிஞ்சிக் குழந்தையை உண்ணும்படி செய்து குழந்தைக்கு நோயைத் தேடுகின்றனர். எந்தத் தாயும் தன் பிள்ளை உண்பது போதாதென்றே எண்ணி வருந்துவர். 'உண்டு களி' என்பதே இக்காலத்தின் கோலமாக இருப்பதால் நோய்களும் அதிகம் நம்மை வந்து வருத்துகின்றன. மட்டான உணவை மட்டும் சத்தாக உண்டுவந்தால் நம்மிடம் நோயணுகா. நல்ல ஆரோக்கியமான வாழ்வை அநுபவிக்கலாம். பசிக்கப் புசி. திருவள்ளுவரும் "மருந்தென வேண்டாவாம்" என்பனபோன்ற திருக்குறட்களைச் சொன்னதும் இக்கருத்துக் கொண்டேயாம்.

செல்வம் படைத்த சிலர் இங்ஙனம் உணவைத் துஷ்பிரயோகம் செய்வதால் வறியவர்கட்கு உணவு தட்டுப்பாடாயிருக்கிறது, வசதியுள்ளவர்கள் உணவைக் கொட்டிச் சிந்துவார்களானால் வறியவர்கள் பட்டினி கிடக்கநேரிடும். கடவுள் உலகில் நம்மையும் படைத்துள்ளார், நம்மை மட்டும் படைத்து நமக்குப் போதிய உணவைப் படைக்காமல் கடவுள் செய்திருப்பார் என்று நாம் சந்தேகப்படத் தேவையில்லை. கல்லினுட் தேரைக்கும் உணவுண்டு. நாம் நாவுக்கு மட்டும் சுவைதேடுவதை விட்டு ஆரோக்கிய வாழ்விற்கு வேண்டப்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே,

இந்துசாதனம்

யாழ், சர்வதாரி ஞூ தை மீ உசூ உ செவ்வாய்க்கிழமை

கொலை களவுகள் அதிகப்படுகின்றன

இந்த இலங்கையின் ஓராண்டுச் சுதந்திரநாட் கொண்டாட்டம் இந்த நாடெங்கும் பரக்க இனிது கொண்டாடப்பட்டது; இந்நாட்டிலுள்ள மக்களுட் சிலரொழியப் பலர் இக்கொண்டாட்டத்தில் ஈடுபட்டு மகிழ்ந்தனரெனலாகும்; சுதந்திரம் வேறு, சுதந்திரவிழாக் கொண்டாட்டம் வேறென்ற காரணம் பற்றிப்போலும், அந்தச் சிலர் குறித்த விழாப்போது மகிழ்ச்சியடைந்திலரெனலாம்; சுதந்திரக் கொண்டாட்டம் ஒருபுறம் நிகழ, இக்கொண்டாட்ட வாரத்தில் இந்நாட்டில் நிகழ்ந்த இரு நிகழ்ச்சிகள் பரிதாபத்தோடும் பயங்கரத்தோடுங் கூடியவையாகும்; அவை நாட்டின் சுதந்திரத்திற்குப் பங்கம் விளைப்பனவுமாகுமெனலாம்.

இவற்றுளொன்று கொழும்புப் பகுதியைச்சேர்ந்த கொட்டாஞ்சேனையில் மிஸ்ரா செனிவரத்தின என்பவரின் கொலை வழக்குச் சம்பந்தமாக பால் எனப்படும் முதற் குற்றவாளியோடு, குறித்த செனிவரத்தினவின் மனைவியென்றிருந்த பெண்ணும் மரண தண்டனை விதிக்கப் பெற்றமையாகும். இலங்கையிலே பெண்கள் நரகொலையாகிய பெருங் கொலையைச் செய்வதும், அக்காரணத்தினால் மரணதண்டனை விதிக்கப்படுதலும் அபூர்வமானவையெனலாம்; இந்நாடு பிருத்தானிய பரிபாலனத்திற் சென்றபின், அதாவது விக்ரோறியா மகாராணியின் ஆளுகைக் காலந் தொட்டு இற்றைவரையில் கொலைக்குற்றங் காரணமாக மரண தண்டனை விதிக்கப்பெற்ற பெண் சன்மங்கள் அறுவர் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. எமது ஞாபகத்திற்கெட்டிய வரையில் தலவுறீனுக் கொலைவழக்கிற் சகோதரிகளாகிய இருவர் மரண தண்டனை விதிக்கப்பட்டனர்; தபிப்பி என்னுமிடத்து நஞ்சூட்டிக் கொன்ற வழக்கில் ஒருத்தி மரண தண்டனை விதிக்கப்பட்டாள்; இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன் கொழும்பு உயர்தர நீதிமன்ற விசாரணைப்போது இருபெண்கள் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டனர். இந்த ஐந்து "பெண்மணி"களும் மரண தண்டனை விதிக்கப் பட்டனரெனினும், இவர்கள் பின்னர்ச் சதாகாலச் சிறைத் தண்டனையென மாற்றப்பட்டுச் சிறையிலிருந்தனரேயொழிய மரண தண்டனையடைந்திலர்; இப்பொழுது ஆறாவதாக மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள மிஸிஸ் செனிவரத்தின எனும் பெண்பாலினளின் கதியும் அப்படித்தான் சிறைவாசமாகுமோ என்பதைப்பற்றி இப்போ ஏதும் அறிதல் முடியாதாகும். இலங்கை சுதந்திரம் பெறுங் காலத்தில் இப்படிக் கொலை பெரும்பாலும் அதிகப்பட்டுவருதல் கவலைப்படத் தக்கதாகும். ஆனால் இலங்கை நாட்டில் தமிழர்கள் பிரதானமாக வாழும் வடமாகாணத்திலே இப்படியான பெண்கொலைக் குற்றம் இற்றைவரையில் நேராதிருத்தல் ஆறுதலுக் கிடமாகும்; யாழ்ப்பாண நாட்டிலும் பெண்களின் சுவாதீனமும் முயற்சிகளும் ஆரவாரமும் மெல்ல மெல்ல அதிகப்பட்டு வருகின்றன; காலகதியில் இவை காரணமாக எவை நேருமோ அறியேம்; இப்படியான கொலைச் செயலுக்குக் காரணம் இந்நாட்டில் இக்காலத்திற் பெண்கள் பெற்றுவரும் போலிச் சுவாதீனமும் அந்த முறையிற் செய்யப்படும் முயற்சிகளுமாகுமெனக் கொழும்பிற் பிரசுரமாகும் ஆங்கிலத் தினசரியொன்று கூறியுள்ளது. அப்பத்திரிகையின் கூற்று ஏற்றுக் கொள்ளத் தக்கதாகும். இலங்கை நாட்டுப் பெண்களுட்பலர் "சுவாதீனம்" "சுதந்திரம்' என்னுஞ் சொற்களுக்குத் "தாம் நினைத்தபடி நடத்தல்" எனப் பொருள்கொண்டு ஒழுகத்தலைப்பட்டுக் கொண்டனர் போலும். இந்த விபரீத விளக்கமும், துரோகச் செயல்களும் பிரதானமாகப் பெண்பாலரால் ஒழிக்கப்படும் வரையில் இலங்கை மக்களைச் சுதந்திரம் பெற்றவர்களென மதித்தல் தவறாகுமெனலாம்.

இது இங்ஙனமாக, அடுத்த பயங்கரமான நிகழ்ச்சி கொழும்புக் குதிரைப் பந்தைய சங்கத்திற்குரிய நான்கு லட்சம் ரூபா திருடப்பட்டமையும் அது காரணமாக நேர்ந்துள்ளதென எண்ணப்படும் குரூர கொலையுமேயாகும்; இக்குரூரமான கொலையோடு கூடிய கொள்ளைச் செயல் இலங்கையிலுள்ள மக்களெல்லாரும் தங்களுயிருக்கும் பொருளுக்கும் காத்திராப் பிரகாரம் ஆபத்து நேருமோவெனத் தனித்தனி நினைத்துத் திகிலுறச்செய்து விட்டது. சென்றவாரம் இலங்கை மக்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாட வேண்டி உண்டாட்டுக்களியாட்டு முதலியன செய்யுஞ் சமயத்தில், இந்தப் படுகொலைச் செய்தியும் பெருந் திருட்டுச் செய்தியும் மக்களுள்ளத்தைக் கலக்கிவிட்டனவெனலாம். பணங்கொண்டுபோன ரதத்தின் சாரதி தெருவீதிக் கணித்தாகவுள்ள காட்டிலே நிற்கும் மரமொன்றிற் சேர்த்துக் கட்டப்பட்டு அவன் கரங்களிரண்டும் தனித்தனி நீட்டி அம்மரத்தின் இரு கொம்பர்களிற் கட்டப்பட்டபடி அவன் பிரேதமாக நிற்கக் காணப்பட்ட காட்சி இலங்கை மக்கள் நினைக்குந்தோறும் ஏங்கச்செய்வதாகும். இப்படியான குரூரச் செயல் இலங்கையில் முன் எக்காலத்தேனும் நடந்ததெனச் சொல்லுதற்குச் சரித்திர ஆதாரங் கண்டிலேம்; இச்செயலும் இலங்கைச் சுவாதீன விழாவை மாசுபடுத்தியதாகும்.

சிலகாலமாக இலங்கையிலே பலவகையான பெருங் கொள்ளைகளும் கொலைகளும் அதிகப்பட்டு வருதல் நிசம்; இலங்கைப் பொலிசர் இத்தீமைகளை அடக்கவும் தடுக்கவும் ஆனமட்டும் முயற்சி செய்தும் அநுகூலமடைந்திலரெனலாம். ஆனால் இப்பொழுது நேர்ந்துள்ள குறித்த பெருந் திருட்டுச் செயலும் பயங்கர கொலையும் இலங்கைப் பொலிஸ் பகுதியாரின் ஊக்கத்தைப் பெரிதுங் கிளர்த்தி விட்டன என்பது பொலிஸ் தலைவராகிய திரு. ஆலுவிகாரையவர்களின் பேச்சைக் கொண்டும் இப்பெருந் திருட்டுக் கொலைகளின் விவரங்களைக் கண்டுபிடிக்கச் செய்யும் முயற்சியைக் கொண்டும் அறியலாகும்; நாட்டில்நேருங்குறைகள் குற்றங்களை விசாரித்து அறிந்து அவைகளைச் செய்வோரை நீதி விசாரணைக்குள்ளாக்கும் விஷயத்திற் பொலிசரோடு ஊரவர்களும் தங்களாலியன்றவரை ஒத்துழைத்தல் வேண்டும்; இல்லையேல் இந்நாட்டைச் சுதந்திரம் பெற்ற நாடெனச் சொல்ல இடமில்லையாம்.

பாரசீக மன்னரைக் கொலைசெய்யமுயற்சி

படம்பிடிப்பவனின் துணிவு

சென்ற வெள்ளிக்கிழமை மாலை பாரசீகத்து மன்னரான முகம்மது ரெஸா பஹ்லவி சுடப்பட்டு, மெல்லிய காயங்களுக்குட்பட்டார். 29 வயதான மன்னரைச் சுட்டவர் பக்திரி ராய என்னும் பெயர்கொண்ட ஒரு புகைப்படம் பிடிப்பவன் என்று அறியக்கிடக்கிறது. மன்னரைச்சுட்டவனை ஜனங்கள் அதிகமாகத்தாக்கிக் காயம் விளைவித்தனர். காயமடைந்த பக்திரிராய் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கே மரணமடைந்தான்.

சர்வகலாசாலையின் 15-ம் ஆண்டுவிழாவின்போது பரிசுகளை வழங்குவதற்காக அங்கே சென்ற மன்னர், மேடையின்மீது அதிகாரிகளுடன் கை குலுக்கும்போதே சுடப்பட்டார். மிகக்கிட்ட இருந்து சுடப்பட்டபோதும், இடுப்பிலும் உதடுகளிலும் சிறிய காயங்கள் ஏற்பட்டனவே தவிர, ஆபத்து ஒன்றுமே நேரவில்லை,

சிந்துமாகாணப் பிரதமர் ராஜிநாமா

சிந்து மாகாணத்தின் பிரதம மந்திரியான ஜனுப் பீர் இலாஹிபக்ஷ் ஷெ. மாகாண கவர்னரிடம் தமது ராஜிநாமாக்கடிதத்தைச் சமர்ப்பித்தார். சிந்து சட்டசபையில் அங்கத்துவம் வகிக்கும் ஒருவருக்குச் சாதகமாக, அவரது தேர்தல் காலத்தில், ஷெ. பிரதமர் சட்டவிரோதமான முறையில் வாக்குகள் சேர்த்துக் கொடுத்தார் என்று, மேற்படி தேர்தலை எதிர்த்துச் செய்யப்பட்ட மனுவில் குறிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாகவே அவர் தன் பதவியை ராஜிநாமா செய்தார்.

விஷயதானஞ் செய்வோர்க்கு விஞ்ஞாபனம்

இப் பத்திரிகையில் வெளியிடுதற்காகிய கடிதங்கள், சங்க சபை கூட்டமென்னுமிவற்றின் நிகழ்ச்சிகள், விவாக நிகழ்ச்சிச் செய்திகள், ஏனைய புதினங்கள் முதலியவற்றை இப்பத்திரிகாபிமானிகள் தங்கள் கைச்சாத்தோடு அனுப்பி வைத்தல் வேண்டும். பத்திரிகையபிமானிகளல்லார்வெளியிடவேண்டுமென விரும்பினால், இப்பத்திரிகையின் அபிமானிகள் மூலமாக அனுப்பி வைப்பார்களாக. இங்ஙனமல்லாதவை இடம்பெறா.

—பத்திராசிரியர்.

நாலுலக்ஷக் கொள்ளை:

சிலுவைபோலிருந்த சில்வா

பெரிய மூளைகளின் வேலையா?

மர்மங்கள் அதிகரிக்கின்றன

சென்றவாரம் திங்கட்கிழமை காலை இலங்கைக் குதிரைப்பந்தயச் சங்கத்துக்குச் சொந்தமான நாலு லக்ஷம் ரூபாவைத் துணிகரமாகவும் மிகச் சாதுர்யமாகவும் கொள்ளையடித்துச் சென்ற கொள்ளைக்கூட்டத்தினரைப் பற்றிய மர்மம் மர்மமாகவே இருக்கிறது

அக் கொள்ளைக் கூட்டத்தினரைச் சேர்ந்தவர்கள் உபயோகித்த வாடகை மோட்டாரின் சாரதியான சில்வா புத்தளத்தில் பெரிய வீதியை அடுத்திருந்த காட்டினுள் ஒரு மரத்தோடு கட்டப்பட்ட நிலையில் இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

புத்தளம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பேர்டினண்ட் அவர்கள் கொள்ளை நடந்ததினத்துக்கு மறுதினம் வரப்பெற்ற ஒருபோஸ்ட் கார்டில், கொள்ளையடிக்க உபயோகிக்கப்பட்ட மோட்டாரின் சாரதி புத்தளத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு அணித்தாக மரத்தோடு சேர்த்துக் கட்டப்பட்டிருப்பார் என்று எழுதப்பட்டிருந்தது. சிங்களத்தில் எழுதப்பட்டிருந்த அந்தப் போஸ்ட்கார்ட் கொழும்பு, ஜனவரி 31, 1949 என்று தபால்கந்தோர் சீலிடப்பட்டிருந்தது.

இன்ஸ்பெக்டரின் பயங்கர அநுபவம்

ஷெ. போஸ்ட்கார்ட் கிடைத்ததும இன்ஸ்பெக்டர் திரு. பேர்டினண்ட் இன்னும் ஒருவரின் துணையோடு பொலிஸ் ஜீப் மோட்டாரில் குறிப்பிட்ட இடத்துக்குப் போனார். அவர் காட்டினுள்ளே பிரவேசித்து, பலமணி நேரமாகத் தேடியும் எவ்விதமான அடையாளமும் காணப்படவில்லை. களைப்படைந்த இன்ஸ்பெக்டர் திரும்பிப்போய் விட எண்ணித் திரும்பியபோது வழியைத் தவறவிட்டு விட்டார். அவர் திரும்பத் திரும்பக் காட்டினுள்ளே சென்றாரே தவிர வெளியே வர முடியவில்லை. சூரியன் அஸ்தமித்து இருள்சூழ ஆரம்பித்தது. இன்ஸ்பெக்டர் பீதியடைந்து எவரிடமிருந்தாவது உதவி கிடைக்கலாம் என்று பலமாகச் சத்தமிட்டார். ஆனால் பலன் கிடைக்கவில்லை. ஈற்றில் தெய்வாதீனமாக அவர் ஒரு வழியைப் பிடித்து மோட்டாரைச் செலுத்தி, வீதியை வந்தடைந்தார். ஆனாலும் அவர் வந்தடைந்தது, அவர் காட்டினுள் பிரவேசித்த இடத்திலிருந்து வெகு தூரத்துக்கப்பாலுள்ள ஓரிடமாயிருந்தது.

சிலுவைபோலிருந்த சில்வா

மறுநாள் கிராமாதிகாரியினதும் வேறும் பல கிராமச் சனங்களினதும் உதவிகொண்டு தேடுதல் நடைபெற்றது. அதற்கும் பிரயோசனம் ஏற்படும்போலக் காணப்படவில்லை. கடைசியில் ஜோன் சில்வா ஒரு மரத்தோடு, கால்கள் ஆதாரத்தில் தொங்கக் கூடியதாக, இரண்டு கைகளையும் இரண்டு புறமும் நீட்டி சிலுவைபோல இறுகக் கட்டப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. அவரது காலடியில் ஷெ வாயு மூகமூடியின் ஒரு பகுதியும் காணப்பட்டது. மரண விசாரணை செய்த அதிகாரி, மிக ஊறடைந்திருந்த பிரேதத்தைப் பரிசிலனை செய்து, வயிற்றில் ஜீரணமாகாமல் சோறும் சாராயமும் இருந்ததாகவும், மரத்தோடு சேர்த்துக் கட்டப்பட்டபோது சில்வா உயிருடன் இருந்திருக்கவேண்டுமெனவும், சில்வா வேறு ஏதோ அதிர்ச்சி காரணமாகவே மரணமடைந்திருக்கிறார் என்றும் கூறினார்.

மற்றுமிரு பிரேதங்கள்?

இத் தேடுதலின் பிறகு, புத்தளத்தில் ஜோன் சில்வா கட்டப்பட்டிருந்த இடத்துக்குக் கிட்ட இன்னும இரண்டு பிரேதங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகச் செய்தி கிடைத்தது. அதை இன்ஸ்பெக்டர் ஜெனரல் சேர் ரிச்சார்ட் அலுவிஹாரா மறுக்கிறார்.

கல்கமுவாவில் புகைரதப்பாதையில் இறந்துகிடந்த ஒருவரும இக்கொள்ளையில் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் அவரது விரலடையாளம் முதலியவற்றைப் பொலிஸார் எடுத்துள்ளனர்.

அலுவிகாரவின் வேண்டுகோள்

இன்ஸ்பெக்டர் ஜெனரல் சேர் ரிச்சார்ட் அலுவிகாரா பொது ஜனங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில், "இக்கொள்ளையில் பெரிய மூளைகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன, இலங்கை முழுவதும் ரகசியப் பொலிஸார் தீவிரமாகப் புலன் விசாரணை செய்கிறார்கள். ஆனாலும் பொதுஜனங்களாய நீங்களும் எங்களுடன் ஒத்துழைக்கவேண்டும். உங்களுக்கு எவ்விதத்திலும் நஷ்டம் நேராமல் பாதுகாப்பது எங்கள் கடமை; அதை மனதில் வைத்துக்கொண்டு பொலிஸாருக்கு நீங்கள் பிரயோஜனமான தகவல் கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

தினமும் பொலிஸார் அடிக்கடி கூடி ஆலோசனை நடத்துகின்றனர். சந்தேகத்தின் பேரில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ முத்துரங்க முதலியார் காலமானார்

சென்னை மாகாண மேல்சபை அங்கத்தினரும், பிரபலமான தமிழ்நாட்டுத் தலைவருமான ஸ்ரீ வி. என். முத்துரங்க முதலியார் சென்ற 5-ம் திகதி சென்னைவாசஸ்தலத்தில் தமது 67-வது வயதிற் காலமானார். முதலியார் தமிழ் நாட்டுக் காங்கிரஸின் தலைவராக இரண்டு முறைகள் தெரிவுசெய்யப்பட்டவர். 1927-ம் ஆண்டு சென்னையில் டாக்டர் அன்ஸாரி தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் மகாநாட்டிற்கு வரவேற்புக் கமிட்டித் தலைவராக இருந்தவர். சத்தியாக்கிரக இயக்கங்களில் சேர்ந்து கொண்டு பல முறை சிறை சென்றவர். மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் காலஞ் சென்ற முதலியாரின் மருமகனாவர். 'சென்னை மாகாணத்தில் இணையீடற்ற ஒரு தலைவரை நாம் இழந்துவிட்டோம்" என்று கவர்னர் ஜெனரல் ராஜாஜி, ஸ்ரீ பக்தவத்ஸலத்துக்கனுப்பியதந்தியில்குறிப்பிட்டார்

அல்லைப் பிட்டி விநாயகராலயம்

அல்லைப்பிட்டி சிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன மகா சபைக் கூட்டம் வருகிறஞாயிற்றுக்கிழமை (13—2—49) மாலை 4 மணிக்கு ஷெ ஆலயத்தில் நிகழும். சைவப்பிரசாரகர் திரு. த. குமாரசாமிப்பிள்ளை, பண்டிதர் திரு. ம. வே. திருஞான சம்பந்தப் பிள்ளை, திருவாளர்கள் சி. நாகையா, இராஜையா முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

:: வானவில் ::

● கலாமந்த்ரன் ●

○ இலங்கையின் சுதந்திர தினம் சென்ற வெள்ளிக்கிழமை இலங்கையின் பல பாகங்களிலும் வெகு சிறப்பாக - உக்கதமாகக் கொண்டாடப்பட்டது. அத்தினம் சுதந்திர தினமாகக் கொண்டாடப்பட்டதில் எவருக்குமே சந்தேகமில்லை, ஆனால் கொண்டாடப்பட்ட சுதந்திரம் சுதந்திரந்தானா என்பது சந்தேகந்தானும்.

○ "பிரதமருக்கும், 12 மந்திரிகளுக்கும், 4 ஹை-கொமிஷனர்களுக்கும் சம்பளமாகவும், 'கௌரவ'ப்படிச் செலவாகவும் இன்று கொடுக்கப்படும் முப்பது லக்ஷத்துக்கதிகமான ரூபாய்களை யிட்டு யோசித்தால், பதினேழு பேர்களுக்குக் கொடுக்கப்படும் அந்தத் தொகையே, அவர்களால் கொண்டாடப்படும் 'சுய சுதந்திர'த்துக்கு அறிகுறியாகக் காணப்படவில்லையா?" என்று ஸ்ரீ பீட்டர் கெனமன் காலிமுக மைதானத்தில் பேசினார். அதை எதிர்த்துப்பேச, தற்காலிக சுதந்திரப் பற்றுள்ள 'மிஸ்டர் பணமன்' முதலியவர்கள் புறப்படலாம் என்று 'வயோதிபர்'கள் சொன்னாலும், அதை யார் நம்பப்போகிறார்கள்?

○ இருந்தாற்போலிருந்துவிட்டு திடீரென்று சிலரில் சிலமாற்றங்கள் ஏற்படுவது வழமையாகி விட்டது. அப்படி ஒரு வழமையைத் தனக்கே உரிமையாக்கிக் கொள்ளாத ஒருவர், தனித் தலைவராக முடியாதாம்! வகுப்புவாதம் என்ற செயற்கை உரமிட்டு, தமிழ் காங்கிரஸை முளைக்க வைத்து கண்ணீர்விட்டு வளர்த்த தலைவர்கள் இப்பொழுது 'அரசனை நம்பி யாரையோ கைவிட்ட' பண்புடைய தங்கள் முதுகெலும்புகளை மறந்துபோனார்களாம். அதே முதுகெலும்புகளில் ஒன்று, தம் தனித் தலைவருக்குத் தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதினால் கூட, பதில் வருமோ என்று யோசிக்கவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டதாம். சோம்பல் மிகுந்தவர்கள் இங்கிருந்து எழுதுவார்கள். அவர்களுக்கு என்ன வேலை? அங்கே வேலைக்குமேல் வேலை, அதற்குமேல் வேறேதோ எல்லாம் கர்த்தக் கொண்டிருக்கும்போது தலைவர் சில சிலமாற்றங்களைத் திடீரென்று ஏற்படுத்தி விடுவதில் என்ன பிழை இருக்கிறது?

○ சுதந்திரசதுக்கத்துக்கு இலங்கையின் நான்கு திசைகளிலிருந்தும் சுதந்திரதின சுபசெய்திகள் அஞ்சல் ஓட்டக்காரரால் கொண்டு செல்லப்பட்டன. வழியிலே, உண்மைச் சுதந்திர பக்தர்களான, வயதுசென்ற எம். பி.க்கள் இரண்டொருவர் கூட, அஞ்சலைப் பங்குபற்றி ஓடினார்கள் என்றகேட்டதும் அக்கர் திகைப்படைந்திருக்கமாட்டார்கள். அந்த எம். பி.க்கள் தங்கள் பாடசாலை நாட்களை எண்ணிப் பார்த்திருப்பார்கள். ஆஹா, எவ்வளவு இன்பமான விளையாட்டுக்கள்! இப்படி நினைத்துக் கொண்டே இன்னும் சில எம். பி. க்கள் மிகச் சீக்கிரத்தில் தாங்கள் சிறுவயதில் குஸ்தியிட்ட நாட்களை எண்ணி, அந்நாட்களை ஞாபகப்படுத்திக் கொள்வதற்காக, மறுபடியும் தளராத வயது காலத்தில், வசதியான சந்தர்ப்பத்தில் 'குஸ்தி' போட ஆரம்பிக்கலாம் என்று ஒரு தேசப்பிறசி வல்லுநர் எதிர்பார்க்கிறார்.

○ "தேசத்தின் பிதா" என்றதுமே, "யார், எப்படி, எந்தத் தேசத்துக்கு, தேசம் முழுவதற்குமா?" என்ற கேள்விகள் பிறக்கின்றன. ஸ்ரீ சேனநாயகா, இலங்கை முழுவதற்கும் பிதா என்ற 'வதந்தி' நாடு முழுவதும், சுதந்திர பக்தர்களின் வட்டாரங்களில் பரவியிருக்கிறது. பிதா அவர் என்றால், மாதா யார் என்பதும் தெரிந்தேயாக வேண்டும். ஆனால் அது தெரியவில்லை, ஸ்ரீமதி லங்காவா, அன்றி, செல்வி லங்காவா என்பது நிச்சயமில்லை என்று ஒரு சந்தேகப் பேர்வழி சொல்லுகிறார். அட்டா, ஸ்ரீமதி லங்காவாகவே இருக்கட்டுமே; செல்வி லங்காவை எதிர்பார்த்து, எத்தனைபேர், தவங்கிடக்கிறார்களோ?

“மறந்த இலக்கியம்”

(ந. புலவைநாயகர் திருவையாறு)

தமிழகம் செய்த தவப்பயனாக, பல அற்புதமான இலக்கியங்களை நாம் பெற்றிருக்கின்றோம். அவைகளை அனுபவிக்கவும் செய்கின்றோம். உலகத்திலே இதுவரை எழுந்திராத பேரிலக்கியங்களைத் தமிழன்னை, தமக்குத் தந்துள்ளாள். திருக்குறள்போன்ற பொதுவான அறநூல்களும் கம்பராமாயணம் போன்ற காவியங்களும், சிலப்பதிகாரம் போன்ற சிறிய காப்பியங்களும், தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களும் நமக்குப் பெருமையைத் தேடித்தருகின்றன, ஔவைப் பிராட்டியார்போன்ற மாதர் மணிகளின் மணிநூல்களும் நமக்குப் புதுப்புதுப் பெருமையினைத் தேடிக்கொடுக்கின்றன.

தமிழ் மறுமலர்ச்சி பெற்று வரும் இக்காலத்தில் இலக்கியவின்பம் அனுபவிக்கத் துடிதுடிக்கும் இளைஞர்கள் பெருமளவில் உருவாகிவரும் இக்கோலத்தில், நாம் பல ஆண்டுகளாய் மறந்துவிட்ட இலக்கியங்களையும் நினைவு கொள்ளல் ஏற்புடைத்தாம். நாம், நமது நூல்களின் அருமை தெரியாமல் எத்தனையோ கருவூலங்களைப் புறக்கணித்து இருக்கின்றோம். மறந்துவிட்ட நூல்களுள், முத்தொள்ளாயிரமும் ஒன்றாகும். இந்நூல் மிக அருமையானதாகும். சொற்சுவையும், பொருட்செறிவும், ஓசைநயமும், பாவ உணர்ச்சியும், ஒருங்கே நிறைந்தது. இதன் ஆசிரியர் இன்னார் என்றும், இவர் காலம் இத்தனைத்து என்றும் தெளிவாகவில்லை.

ஆனால் பாடல்களின் எண்ணிக்கை மட்டும், மூன்றுதொள்ளாயிரம் என்று அறியலாம், இவற்றை தமிழ்நாட்டு மூவேந்தரைப்பற்றிப் பாடியுள்ள பாடல்களில் சிறுசில மட்டும் கிடைத்துள்ளன. ஏனைய பாடல்கள் முழுதும் இப்போது தெரியக்கூடவில்லை. தற்போது நமக்குக் கிடைத்துள்ள தொண்ணூறு பாடல்களும் படிப்பார் உளங்களை ஈர்க்கும் தன்மை வாய்ந்தனவாம். இந்நூலில் காதல்பகுதிகளும், வீரப்பகுதிகளும் மிகுந்துள்ளன. இவ்விரண்டும் இன்று நமக்குத் தேவைப்படுவனவேயாம. காதலின் தெய்விகசக்திக்கு ஓர் இழுக்குக் கற்பித்து ‘கண்டதே காட்சி கொண்டதே கோலம்’ என்ற போலிக்காதலால் மயங்கும் தற்கால மக்கட்கு இப்பகுதி அவசியமானதேயாகும்.

வீரப்பகுதியும் விரும்பப்படுவதேயாம். வீரஞ்செறிந்து கிடந்த தமிழகம், ஆண்மை நிறையப்பெற்றிருந்த தமிழகம் இன்று அவலமாய்க் காட்சி அளிக்கின்றது என்பதை அறியாதார் யார்! செருக்களத்திலே கணவன் மடிந்துவிட்ட செய்தியைக் கேட்டும் மனம் தளராது தனது ஒரே மைந்தனையும் அலங்காரஞ்செய்து, போர்க்களத்துக்கு அனுப்பிவைக்கும் தாய்மார்களையும், போரில் புறப்புண்பட்டுஉயிர்வாழ ஒப்பாது, உயிர்த்து, வீரத்திற்கும், காதற்கும் பெருமை தேடித் தந்த பெருந்தகைகளையும்கொண்டிருந்த தமிழ்நாடு இன்று இத்துறையில் பிற்பாக்கில் ஆழ்ந்திருப்பதை மறுப்பவரும் உண்டோ?

எனவே, முத்தொள்ளாயிரம் நமக்கு, சமரான பயமான சுவையான பாக்களை அள்ளி அள்ளித் தருகின்றது, இதனை விளக்கும் ஒரு பாடல் கூறி முடித்துக் கொள்வாம்.

சேரவேந்தனுக்கும் அவன்பகைவர்கட்கும் போர் துவங்கியது. படை வீரரோடும், யானை, பரி முதலான சேனைகளோடும், பகைவன் சேரனுடன் அமர் புரிய வந்தான். அரசர்களது இருப்பிடத்தை (போர்க்களப் பாடிவீடு) உணர்த்த ஆங்கு வெண் குடை ஒன்று அமைக்கப் பட்டிருந்தது. யானைகட்குக் கள்ளைக் கொடுத்து வெறி கொள்ளச் செய்து விட்டார்கள். மத யானைக்கு மது வெறியும் கலந்தால் கேட்கவா வேண்டும்? பித்துக் கொண்ட பேய் கொட்டுக்கண்டால் சும்மா விருக்குமா என்ன! பகை வீரர்களின் மீது யானை பாய்ந்து சென்று அவர்களை வீழ்த்தியது. வெண் குடையை நாசமாக்கித் தன் காற்கீழ்போட்டுத் துவட்டி விட்டது. பகை மன்னனும் மடிந்தான். வெண்குடையினை அழித்து மிதித்துப் பழக்கப்பட்டுள்ள யானையானது, போர்முடிந்து ஊர் திரும்புகிறது. நீல வானிலே, நட்சத்திர மலர்களினிடையே முழு மதி தோன்றுகிறது. அதன் வெள்ளிய நிறம் அலாதியான சோபையைத் தருகின்றது. நிலவைக் கண்ணுற்ற யானை, அதனை வெண் குடையெனக் கருதி அழிக்கு முகத்தான் தன் துதிக்கையை வான் நோக்கி உயர்த்துமாம்.

ஏமாற்றமடையும் களிறு, வெஞ் சினங்கொண்டு வீராவேசத்துடன் நிலத்தினின்றும் வானிற்கு மாகத் தாவித் தாவிக் குதித்துத் துள்ளுமாம், இக்கருத்துடைய பாட்டு அடியில் வருமாறு:

“வீறுசால் மன்னர் விரிதாம
வெண்குடையைப்
பாரளித்த பரிசயத்தால்—
—சேறுது
செங்கண்மாக் கோதை
சினவெங்களியானை
திங்கள்மேல் நீட்டும்
தன்கை.

இதைப்போன்றவை எத்தனையோ பாடல்கள் முத்தொள்ளாயிரத்தில் உள்ளன. முழுப் பாடல்களும் கிடைத்தால், நாம் பேறு செய்தவர்களே. இப்பாடல்களைத் தனியே இருக்கும்போது படித்துத் திளைக்கலாம். கவிதைகளை ரசித்து அனுபவிக்கலாம். எனவே, மறந்த இலக்கியம் எனும் பெயரைப் போக்கி மாண்புடைய இலக்கியமாகக் கருதி, முத்தொள்ளாயிரத்தை நாம் பாராட்டுவோமாக.

—குருகுலம்.

சிங்களர்-தமிழர் ஒற்றுமை அவசியம்

அதிகார் நாகநாதர் பேச்சு

“அறுபது வருஷங்களுக்கு மேலாக நான் இந்தியர்களுக்கிடையே வாழ்ந்து தொழிலாற்றியும் இருக்கிறேன். அந்த அநுபவத்திலிருந்து, இந்தியர்களுக்குப் பிரஜா உரிமை மறுக்கப்படுகிறதனால் இலங்கைத் தமிழர்களுக்கும் தாக்கம் ஏற்படும் என்று கூறுவோர் கூற்றை நான் எதிர்க்கிறேன்” என்று அதிகார் ஸ்ரீ நாகநாதர் அவர்கள் நீர்வேலி அத்தியார் கல்லூரியில் சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்ற சுதந்திர தினக் கொண்டாட்டத்தின்போது கூறினார். அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில், “சிங்கள மக்களுடன் ஒத்துழைக்காது, அதனால் தமிழ்ச் சாதியத்தாருக்குத் தீங்குசெய்து வந்த தலைவர்கள், இப்பொழுது சிங்களருடன் ஒத்துழைத்து, அதனால் தமிழர்களுக்கு நன்மை செய்வதைக்காண மகிழ்கிறேன். சிங்களர் தமிழர் ஒற்றுமைப்பட்டு வாழவேண்டியது மிக அவசியமானது” என்றும் குறிப்பிட்டார்.

கோண்டாவில் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கம்

சுதந்திர தினத்தைக் கொண்டாடும் பொருட்டு மேற்படி சங்க ஆதரவில் அரசடிப் பிள்ளையார் கோயில் முன்றிலில் திருவாளர் எஸ். சி. சிவரத்தினம் பி. ஏ. அவர்களின் தலைமையில் மாபெருங்கூட்டம் கூடியது. கொக்குவில் கல்லூரி ஆசிரியர் பண்டிதர் எம். சின்னத்தம்பி பி. ஏ. அவர்கள் ‘கிராம ஒற்றுமை’ என்னும் பொருள்பற்றி கேட்போர் நெஞ்சகுளிரும்வண்ணம், ஒற்றுமையினால் விளையக்கூடிய நற்பலன்களைப் படிப்படி தெளிவுறுத்தினார். இக் கிராமத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுவரும் உதவிச் சுகாதார பரிசோதகர் திரு. வீரசிங்கம் அவர்களுக்கும் ஒற்றுமையை வலியுறுத்தினார். பின்னர் தலைவர் அவர்கள் ‘சுதந்திர இலங்கை’ என்னும் பொருள்பற்றி கற்றோர்க்கும் மற்றோர்க்கும் இன்பூட்டும் வகையில் நகைச்சுவைததும்பப் பேசினார். நன்றி கூறலுடன் கூட்டம் மாலை 9 மணிவரையில் இனிது நிறைவெய்தியது.

—கடித.

விவாகம்

கனகரத்தினம்—நாகேசுவரி

திருநெல்வேலி வடக்கு சிதம்பரப்பிள்ளை அவர்களின் புத்திரனும், தெல்லிப்பழை உதயதாரகை அச்சியந்திரசாலையில் கடமையாற்றும், தி. சி. சுப்பிரமணியமவர்களின் மைத்துனனும், பொலிஸ் பகுதியில் கடமையாற்றுபவருமாகிய திரு. கனகரத்தினம் அவர்களுக்கும், வட்டுக்கோட்டை திரு. சுப்பையா அவர்களின் புத்திரி செல்வி நாகேசுவரி அம்மாளுக்கும் சென்ற (4—2—49) 21-ந் திகதி இரவு 3 மணியளவில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் மணமகளில்லத்திற்றிலே விவாகம் விதிப்படி சிறப்பாக நிறைவேறியது.

மணமக்கள் அட்ட ஐசுவரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழ எல்லாம் வல்ல விக்கினேசுவரப்பெருமான் அருள் புரிவாராக

S. V. முதலியார்-இராஜராஜேஸ்வரி

சென்ற வியாழக்கிழமை (4-2-49 இரவு 3 மணிக்குமேல் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் புன்னாலைக்கட்டுவன் திரு. ஆ. சங்கரப்பிள்ளை யவர்களின் புதல்வன் திரு. V. முதலியாருக்கும் மயிலிட்டி ஆசிரியர் சி. சுவாமிநாதனவர்களின் புதல்வி திருவளர் செல்வி இராஜராஜேஸ்வரி அம்மாளுக்கும் மணமகளில்லத்திற்றிலே விவாகம் விதிப்படி சிறப்புற நிறைவெய்தியது. தம்பதிகள் சகல செல்வங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழ்வார்களாக.

தங்கராசா—புஷ்பராணி

வயாவிளான் திரு. க. வே. சுப்பிரமணியம் அவர்களின் புத்திரி செல்வி. புஷ்பராணிக்கும், யாழ்ப்பாணம் நில அவதான நிலையத்தில் கடமையாற்றும், உரும்பராய் திரு. எஸ். கந்தையா அவர்களின் புத்திரன் திரு. தங்கராஜாவுக்கும் சென்ற வியாழக்கிழமை (3 2-49) பகல் 12 மணியளவில் நிகழ்ந்த சுப முகூர்த்தத்தில் விவாகம் இனிதே நடைபெற்றது, மணமக்கள் அட்ட ஐஸ்வரியங்களையும் பெற்று இன்புற்று இனிது வாழ்ந்திருக்க இறைவன் அருள்புரிவாராக.

—கடித.

ஏழாலைச் சமூகசேவைச் சங்கம்

மேற்படி சங்கக் கூட்டம் ஒன்று இந்தவருஷம் தைமாசம் 17-ம் திகதி (30-1-49) ஞாயிற்றுக் கிழமை திரு. செ. சின்னத்துரை B. A. அவர்களின் தலைமையில கூடியது.

மகாத்மாகாந்தி அடிகள் மறைந்த சிரார்த்த தினமாகையால் முதலாவது அவரது ஞாபகார்த்தமாகச் சிலநிகழ்ச்சிகள் நடைபெற்றன. தலைவர் மகாத்மா காந்தி அடிகளின் இடையறாக் கடவுள் தியானம், சத்தியம், நேர்மை, சாதுரியம், தூய்மை, ஆன்மசக்தி முதலியவற்றிற் சில வார்த்தைகள் பேசியபின், திருவாளர்கள் மு ஞானப்பிரகாசம் B. A., B Sc., சி. தில்லைநடேசன் என்பவர்களாலும், சி. முருகவேள், மு. மகாதேவன், நா. செல்வரத்தினம் முதலிய கல்லூரி மாணவர்களாலும் காந்தி அடிகளைப்பற்றிப் பேச்சுக்கள் நிகழ்த்தப்பட்டன.

பின் வருவன சபையோரால் ஏகமனதாகத் தீர்மானம் செய்யப்பட்டன.

1. சங்க ஆதரவில ஞாயிற்றுக்கிழமைதோறும் திருக்குறள் வகுப்பு பகல் 10 மணி தொடக்கம் 11 மணி வரை நடாத்துதல், திருக்குறள் கற்பிப்பதில் பங்குபற்றுபவர்கள் திருவாளர்கள் மு. ஞானப்பிரகாசம் B. A., B. Sc., பண்டிதரும், சைவப்புலவருமாகிய திரு. மு. கந்தையா அவர்கள்.

2. மாதந்தோறும் சமயம், பாஷை, சுகாதாரம், பொது அறிவு சம்பந்தமான விஷயங்களில் அறிஞர்களால் சொற்பொழிவுகள் சங்க ஆதரவில் நடாத்துதல் என்பனவாம்.

திரு. இ. குணரத்தினம் அவர்களால் காந்தி அடிகளைப்பற்றிய பாடல்கள் படிக்கப்பட்டன, தேவார பாராயணத்துடன் கூட்டம் முடிவெய்தியது.

—கடித.

ராஜாஜியின் சகோதரர் மரணம்

கவர்னர் ஜெனரல் ஸ்ரீ ராஜாஜியின் மூத்த சகோதரரான ஸ்ரீ பி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் சென்ற 5-ம் திகதி மாலை காலமானார்.

ஆசிரியருக்குக் கடிதம்

மகா சிவராத்திரி விரத நிர்ணயம்

ஐயா,

சைவர்கள் அனுஷ்டிக்கின்ற விரதங்களுள் மகா சிவராத்திரியும் ஒன்றாகும். சில பிரமாண நூல்களை ஆதாரமாகக் கொண்டே வாக்கிய, திருக்கணித பஞ்சாங்ககாரர் விரதங்களைக் கணித்து வெளிப்படுத்துகின்றனர். ஆனால், இரு பஞ்சாங்ககாரருக்கும் திதி வியாபகம், அதாவது தொடக்க முடிபுகள் ஏறக்குறைய ஒரே விதமாக இருக்கும் காலங்களிற்கூட அவர்கள் சில விரத தினங்களை வெவ்வேறு நாட்களிற் குறிப்பிட்டு, மக்களை மயக்கி விடுகின்றார்கள்.

இவ்வருடம் மாசி மாதத்துக் கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தசி கொக்குவில் வாக்கியபஞ்சாங்கத்தின்படி, 14-ந் திகதி (5—2—49) வெள்ளிக்கிழமை இரவு 11 மணி 38 நிமிஷத்திற்குத் தொடங்கி அடுத்தநாள் இரவு 11 மணி 07 நிமிஷம் வரையும் நிற்கிறது மட்டுவில் திருக்கணித பஞ்சாங்கத்தின்படி மேற்படி சதுர்த்தசி 14-ந் திகதி (2—2—49) வெள்ளிக்கிழமை இரவு 10 மணி 02 நிமிஷத்திற்குத் தொடங்கி அடுத்தநாள் இரவு 12 மணி 05 நிமிஷம் வரையும் நிற்கிறது. இப்படியிருந்தும் மகா சிவராத்திரி 14-ந் திகதி வெள்ளிக்கிழமை யெனக் கணிதகாரரும் அடுத்த நாளாகிய சனிக்கிழமையென வாக்கியகாரரும் குறிப்பிட்டிருக்கின்றனர். இதனால் எத் தினத்தில் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்க வேண்டுமென்ற முடிவுக்கு வரமுடியாமல் சைவ உலகு திண்டாடுகின்றது.

பிரமாண நூல்களை ஆதாரமாகக் கொண்டு கணிக்கும்போது ஏதோ ஒரு முடிபுக்குத்தான் வரக் கூடியதாக இருக்கும் ஒரு விஷயத்தில் இருவிதமான முடிபுக்கு வரக்கூடியதாக எந்தப் பிரமாண நூலாவது அமைந்திருக்கமாட்டாது. எனவே, குறித்த இருநாட்களில் எந்தநாளில்சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பது சாஸ்திர சம்மதமாக இருக்க முடியும் என்பதையே நாம் முடிபுசெய்தல் வேண்டும் ஆதலின், அந்தநாள் வெள்ளியா அல்லது சனியா என்பதை அறிஞர்கள் ஆராய்ந்து வெளியிட்டால் சைவ உலகு பெரும்பயனடையும்.

மணிவாசகசபை **சி. வைரவனர்.**
காரைநகர்,
5-2-49.

ஏழாலைச் சைவ இளைஞர் சங்கம்

1922-ம் ஆண்டு தொடக்கம் 1939-ம் ஆண்டுவரைக்கும் நடைபெற்றதும், அநேக சேவைசெய்ததும் பின் சில காரணங்களால் நடைபெறாமல் இருந்ததுமாகிய ஏழாலைச் சைவஇளைஞர்சங்கம் மறுபடியும் புனருத்தாரணம் செய்யப்பட்டது.

நிகழும் சர்வதாரி வருஷம் தை மாதம் 22-ம் திகதி (4-2-49) மேற்படி சங்கம், திரு. செ. சின்னத்துரை B. A. அவர்களின் தலைமையில் காலை 10 மணிக்கு ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் கூடியது. அநேக அங்கத்தினர்கள் கூடினர். சங்க நோக்கத்தைப் பற்றியும் அதன் அவசியத்தைப் பற்றியும் தலைவர் அவர்கள் பேசியபின் சில மாணவர்களும் பேசினார்கள். சங்க உத்தியோகத்தவர்களின் நியமனம் பின் நடைபெற்றது.

1, ஏழாலைமேற்கு ஆசிரியர்கள் சங்கத்தின் போஷர்களாக நியமிக்கப்பட்டனர். 2, சங்கத்தலைவர்: திரு. நா. செல்வரத்தினம், 3. காரியதரிசி: ச. மயில்வாகனம், 4. தனாதிகாரி: ச. சத்தியமூர்த்தி. வேறுசில நியமனங்களின் பின் தேவார பாராயணத்துடன் கூட்டம் கலைந்தது.

—கடித.

தேவை

அராலி தெற்கு சரஸ்வதி வித்தியாசாலையில் (1—4—49) தொடக்கம் கடமையாற்றும் பொருட்டாக தமிழ் ஆசிரிய தராதரப் பத்திரமுடைய ஓர் ஆசிரியை தேவை. விசேட தையல்வேலை, சங்கீதம் என்பன வுடையார்க்குத் தனி மதிப்புண்டு. விரும்புவோர் 15-2 49 க்கு முன்னர் மானேசர், சரஸ்வதி வித்தியாசாலை, அராலி என்னும் முகவரியில் விண்ணப்பஞ் செய்க.

M 228 4, 8-2-49.

நோய்தரும் உணவு

1-ம் பக்கத் தொடர்ச்சி

படும் சத்தான உணவு எவை என்று ஆராய்ந்து அவ்வுணவை அளவறிந்து உண்ணப் பழகினல் நமக்குஉணவுநோயாகமாட்டாது. பஞ்சமும் நேரிடமாட்டாது.

கடைகளில்வியாபாரமாகும் தின்பண்டங்களின் நிலைமையைச் சற்று ஆராய்ந்து பார்ப்போமானால் அவைமூலமே நமக்குப் பல தொற்று நோய்கள் உண்டாகின்றன.

முக்கியமாய் நோய்களைத் தீர்ப்பதற்கென்று ஆஸ்பத்திரிகளில் போய்க் கிடக்கும்போது அங்கு பெட்டிகளில் பலர் தின்பண்டங்களைக் கொண்டுவந்து மத்தியான வேளைகளில் விற்பனவு செய்கிறார்கள். ஆங்கில மருந்துகட்குப் பத்தியம் இல்லையென்று பலர் இப்பண்டங்களையும் விலைக்குப் பெற்று உண்கிறார்கள், இவ்வுணவு நோய்தருமா குணந்தருமா என்று நாம் இலகுவில் அறியலாம், அதிகாரிகள் இதை உடனே தடைசெய்தல் வேண்டும், இந்த ஆஸ்பத்திரிகளின் முன்பாக அமைக்கப்பட்டுள்ள சாப்பாட்டுக் கடைகளில் சுகாதார முறை யென்பது சிறிதும் கவனிக்கப்படுவதில்லை. உண்மையான சுகாதார விதிகளை அறிந்தவரும் கடைகளில் பல நோய்வாய்ப்பட்டோர் கலந்துண்ணும் இடங்களில் உண்ண விரும்பார்கள்.- சிலர் வீட்டில் எவ்வித சுவையான உணவிருப்பினும் கடைகளில் உண்ணாவிட்டால் பத்தியப்படுவதில்லை என்று வந்துண்டு நோயைத்தேட வழிதேடுகின்றனர். சுகாதார அதிகாரிகள் கடைகளில் உணவுகளைத் தயாரிப்போர் தொற்றுநோய்பற்றவர்களாய் இருக்கிறார்களா வென்று கண்காணிப்பதில்லை. உணவு தயாரிக்கப்படும் பின்புறங்கள் நாற்றமெடுத்துப்போய் இருப்பினும் முன்புறங்களை மட்டும் அழகுபடுத்திக் கண்ணாடி அலுமாரிகளில் அழகாக அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் பட்சணங்கள் சிலருக்குத் திருப்தி அளித்துவிடுகின்றன. முன்புறத்தில் ஆசையுடன் உண்டபின் பின்புறத்தில் கையலம்பச் சென்றால் உண்டதெல்லாம் வெளியில் வந்துவிடுமோ என்று அஞ்சும்படியான ஆபாசங்கள் தென்படுகின்றன. உணவுக்கடை முதலாளிமார்கள் கடைகளை அழகுபடுத்துவதில் போட்டி யிடுவதிலும் ஆசாரப்படுத்துவதில் போட்டியிடும்படி செய்வது அங்கு உண்ணச் செல்லும்பொது ஜனங்களின் மனோபாவனையில் தங்கியுள்ளது பொதுஜனம இக்கடை ஆசாரமற்றதென்று உண்ணாதுவிடின் வியாபாரிகள் உடனே கவனம் செலுத்துவார்கள். சுகாதார அதிகாரிகள் எவ்வளவு சொன்னாலும் பிரயோசனப்படுவதில்லை.

இங்ஙனமாக உணவுக் கடைகள் சாப்பாட்டுக் கிளப்புகளில் மக்கள் ஆசாரம்பாராது காசைக் கொடுத்துண்டு பல நோயைத் தேடிச்செல்கின்றனர்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். ஆதலால் உண்ட உணவு சீரணிக்குமுன் அமிர்தமாயினும் அருந்தாது அளவறிந்து உண்டால் உடலுக்கு உறுதிதரும். அளவுகடந்துண்டால் உடலுக்கு உணவே நஞ்சாகி நோய்தரும்.

வாலிபர் முன்னேற்றச் சங்கம்

வெள்ளவத்தை

௸டி சங்கக் கூட்டம் வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் 29—1—49 சனிக்கிழமை மாலை 5½ மணியளவில் நடைபெற்றது. திரு. சே. நடராசா, அவர்கள் “இளைஞரும் வருங்காலமும்” என்ற பொருள்பற்றி ஒரு அரிய சொற்பொழிவாற்றினர். பின்னர் சங்க உத்தியோகஸ்தர் தெரிவு செய்யப்பட்டனர். திரு. வ. என். நடராசா தலைவராகவும், திரு. கை. சுப்பிரமணியம் உபதலைவராகவும், திரு. எஸ். சே. வேலாயுதர், திரு. வ. ஜெயரத்னம் என்போர் இணைக்காரியதரிசிகளாகவும், திரு. சே. வைரமுத்து தனாதிகாரியாகவும், பின்னும் பதின்மர் நிர்வாகசபை அங்கத்தினராகவும் தெரிவு செய்யப்பட்டனர். கூட்டம் 8½ மணியளவில் இனிது நிறைவெய்தியது.

—கடித.

கந்தபுராணக்கவிநுட்பம்

விடைபெறு படலம்

[வித்துவசிரோமணி ந.ச. பொன்னம்பலப்பிள்ளையவர்கள்வாய்க் கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும்பெருங் குறிப்புக்கள்இப்[ ]பகரக்குறியீட்டுடன்வெளியிடப்பட்டுள்ளன.]

இழிந்திடு மவுணரால் யாதோர் காலமும்
ஒழிந்திட லின்றியே யுறைந்த சீரொடும்
கழிந்ததேன் கடிநகர் அதனை யானிவண்
மொழிந்திடல் வேண்டுமோ வுணர்தி முற்றுநீ.

ஒருகாலத்தும் அழிதலில்லாது இருந்த செல்வஞ் சிறப்பென்னுமிவற்றுடன் எனது சிறந்த பட்டினம இழிவுடையவர்களாகிய அசுரர்களாற் சிதைவுற்றது, தேவரீர் முற்றறிவுடையீராதலின் (எனக்கு நேர்ந்த இன்னலாகிய) அதனைத் தேவரீருக்கு எடுத்து விண்ணப்பஞ் செய்யவேண்டுமோ (வேண்டுவதில்லை) என்பது கருத்து.

சீர்-சிறப்பு, செல்வம்; நகர்-அமராவதி; சூரபன்மனாலன்றி முன் எக்காலத்தேனும் அமராவதி யென்னும் நகர் அழிந்ததில்லை யாதலின் யாதோர் காலமும் ஒழிந்திடலின்றியே யுறைந்த சீரொடும் என்றான்.

முன்னுற யான்றவம் முயன்று செய்துழித்
துன்னினை நங்களோர் தோன்றல் எய்துவான்
அன்னவ னைக்கொடே யவுணர்ச் செற்றுநும்
இன்னலை யகற்றுது மென்றி யெந்தை நீ.

எம்பெருமானே! தமியேன் முற்காலத்தில் முயற்சியோடு தவஞ் செய்தபோது, தேவரீர் முன்வந்தருளி தேவரீரிடத்து ஒரு திருக்குமாரர் உதிப்பார், அத்திருக்குமாரர்மூலம் அசுரர்களைக் கொல்லுவிப்போம், (ஆனதால) நீவிர் கொண்ட துயரம் ஒழிதிர் எனக் கூறியருளினீர் என்பது கருத்து.

அக்காலத்து இந்திரன் பெருமுயற்சியோடு அரிய தவத்தைச் செய்தபின்பே பெருமான் எழுந்தருளி அவனுக்கு வர முதவினராதலின் “முயன்று செய்துழித் துன்னினை” என்றான். தன்னொடு ஏனைய தேவர்களையும் உட்படுத்தி “நும்” என்றான். (27)

அப்படிக் குமரனும் அவத ரித்துளன்
இப்பகல் காறுமெம் இன்னல் தீர்த்திலை
முப்புவா னவந்தொழு ‘முதல்வ தீயரேந்
துப்புறு பவப்பயன் றொலைந்த தில்லையோ”

அவ்வாறே ஒரு திருக்குமாரரும் உதித்துள்ளார், (ஆயினும்) இற்றைவரை (அவ்வசுரர்களால் எங்கட்கு நேர்ந்த) இடரை ஒழித்தருளினீரல்லீர்; (சுவர்க்க மத்திய பாதல மெனப்படும்) மூன்று உலகினுள்ளாரும் பணியும் முழுமுதற் கடவுளே; பாவிகளாகிய எங்கள் வலிய தீவினைப்பயன் இன்னமும் ஒழிந்து போகவில்லையோ என்பது கருத்து.

அப்படி - தேவரீர் வாக்குத்தத்தவண்ணம்; மூவுலகத்தவர்களாலும் பரம்பொருளென வணக்கப்படும் தேவரீர் விண்ணுலக வாசிகளாகிய எங்கள்பால் மாத்திரம் கருணையின்றி வாளாவிருக்கின்றீ ரென எண்ணுதல் தோஷமாகும், பராமுகமாயிருத்தற்குக் காரணம் தேவர்களாகிய நாங்கள் ஈட்டிய பொல்லா வினைப்பயன் இன்னமும் எங்களால் நுகர்ந்து தொலைக்கப்படுதலின்றி எஞ்சியிருத்தலினாற் போலும் என்பான் “தீயரேந் துப்புறு பவப்பயன் றொலைந்ததில்லையோ” என்றனன். [துப்பு - வலிமை]. (28)

திருச்சி ரேடியோ

* இசைத்தட்டு

புதன் பெப் 9

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 திருச்சூர் பி ராதாகிருஷ்ணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 திருவிழிமிழலை சகோதரர்கள் நாகஸ்வரம்* 8 30 மன்னார்குடி சே சூர்யபாய் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் * 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 மன்னார்குடி சே. சூர்யபாய் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 மன்னார்குடி சே. சூர்யபாய் பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 திருவாளப்புத்தூர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளை வயலின் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 மீராபஜன் * 7 15 நீராத நிர்ப்பு எழுதியது க. ஸி. 7 30 தமிழில் செய்திகள் 7 45 மாகாண அபிவிருத்தி பேச்சு 8 திருச்சூர் பி. ராதாகிருஷ்ணன் பாட்டு 8 30 திருவாளப்புத்தூர் கிருஷ்ணமூர்த்திபிள்ளை வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 பிரபாத் பாண்ட் * 9 30 லண்டனிலிருந்துசெய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலைஆங்கிலம் 9 45 தான வர்ணம் 10 இசைவேளை * 10 30 முடிவு.

வியாழன் பெப் 10

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 கும்பகோணம் வி பி ராஜேஸ்வரி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை* 8 30 கடத்தூர் வெங்கடேசய்யர், சங்கராமய்யர் இருவீணைகள் 9 முடிவு.

1 கதம்பம் * 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2 05 அம்புலி பெண்களுக்கான இசை நிகழ்ச்சி 2 15 கல்வி ஒலிபரப்பு 2 45 முடிவு.

மாலை 5 கடத்தூர் வெங்கடேசய்யர் சங்கராமய்யர் இரு வீணைகள் 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் * 7 30 தமிழில் செய்திகள் 7 45 சூழ்நிலை சுகாதாரம் ஊர் அமைப்பு 8 டி கே ஜயராமய்யர் வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 குரல் வகை * 9 30 லண்டனிலிருந்துசெய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 தந்தி இசை 10 சமது சங்கீதம் ஒலிப்பதிவு 10 30 முடிவு.

வெள்ளி பெப் 11

காலை 7 15 கீதாரம்பம் 7 20 தமிழில் செய்திகள் 7 30 நாகர்கோயில் ஆர் எஸ் முத்து பாட்டு 8 ஆங்கிலத்தில்செய்திகள் 8 15 திருச்சி வாத்ய கோஷ்டி 8 30 சீதா நாராயணன பாட்டு 9 முடிவு.

1 சதம்பம் * 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 நாகர்கோயில் ஆர் எஸ். முத்து பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 நாகர்கோயில் ஆர் எஸ், முத்து பாட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 3 முடிவு.

மாலை 5 சேலம் ஜி தேசிகன் பாட்டு 5 40 குரான்-ஷரீப் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருவிழிமிழலை வி. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை நாகஸ்வரம் 7 30 தமிழில் செய்திகள் 7 45 திருக்குறள்* 8 சமது தபால் பெட்டி 8 15 சேலம் ஜி தேசிகன் பாட்டு 8 30 திருவிழிமிழலை வி. மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 நாட்டுப்பாடல்கள் 9 30 லண்டனி லிருந்து செய்திகள் 9 40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9 45 எச் எஸ் மத்வாச்சார் கோட்டு வாத்யம் 10 நீங்கள் கேட்டவை * 10 30 முடிவு

ஸ்ரீ

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

திருவருளை முன்னிட்டு, அடுத்துவரும் விரோதிவருஷத்தில் துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமிகோயிற் கும்பாபிஷேகம் செய்யவேண்டி இருப்பதால், டி கோயில் திருப்பணிகளைப் புதுக்கிச் செய்தற்கு ரூபா 25000-00 வரையில் மதிப்பிடப்படுகின்றது. இருப்பிற் பணம் குறைவாக இருத்தலால், அன்பர்கள் தங்களாலியன்ற பணஉதவி புரியுமாறு வேண்டுகின்றோம்.

பணம் அனுப்பும் அன்பர்கள் கௌரவதனாதிகாரி C. மாணிக்கவாசக ரவர்களின் விலாசத்துக்கு அனுப்பிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக் கொள்க.

மேலும் நேர்முகமாகப் பற்றுச்சீட்டுடன் வருபவர்களிடமும் பணந்தைக்கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம். பற்றுச்சீட்டில்லாரிடம் பணம் கொடுக்கவேண்டாம்.

பணம் அனுப்பும் விலாசம்:

C. மாணிக்கவாசகர்,
கௌரவ தனாதிகாரி,
புலோலி, பருத்தித்துறை.

இங்ஙனம்,
M. செல்வத்துரை,
கௌரவ காரியதரிசி,
துன்னாலை.

Std 9 25—1—49—22—4—49.

கோவை தமிழ்ச் சங்க வெளியீடுகள்

C. K. சுப்ரமணிய முதலியார் எழுதியது

			ரூபா. சதம
பெரியபுராணம்	...	தொகுதி I ...	10 50
,,	...	,, II ...	10 50
,,	...	,, I-ம், II-ம்	13 15
,,	...	21-வது வெளியீடு	1 60
,,	...	22 ,, ,,	1 60
,,	...	23 ,, ,,	1 60
,,	...	24 ,, ,,	1 60
,,	...	25 ,, ,,	1 60
,,	...	(கண்ணப்பர் புராணம்)	2 10
,,	...	(திருக்குறிப்புத் தொண்டர்)	1 60
,,	...	(சண்டேஸ்வரர்)	80
,,	...	(காரைக்காலம்மையார்)	1 60
,,	...	(அப்பூதி நாயனார்)	55
,,	...	(கண்ணப்பர் சரிதை)	45
,,	...	(சுந்தரமூர்த்தி தேவர்)	55
,,	...	(திருநாவுக்கரசர்)	40
C. K. சுப்ரமணிய முதலியார் வாழ்க்கை வரலாறு			30

மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாச யந்திரசாலை
வண்ணார்பண்ணை

திருவள்ளுவர் நூற்பொருளை எடுத்தாண்ட சங்கப் புலவர்கள்

1-ம் பக்கத் தொடர்ச்சி

கறு நுதல் பசத்த லஞ்சிச்
சிறுமை யுறுபவோ செய்பறி
யலரே"

இதன் கண்,

"நீரின் றமையா துலகெனின்
யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு"

எனுங் குறட்பாவின் சொற்றொடர் அப்படியே அமைந்திருத்தல் காண்க. "நீரின் றமையா துலகு" எனுஞ் சொற்றொடர்ப் பொருள் பொய்யா நாவிற் கபிலரைப் பிணித்தாட் கொண்ட அருமைப்பாடொன்றே திருவள்ளுவரின் பொருள்நலங் கனிந்த தெளி சொற்றொடையாற்றலை நன்கு தெரிப்பதாகும்.

குறிஞ்சிப்பாட்டு 204-209

"மைத்திணம் ஒழுகிய மெய்ம்மலி
யடிசில்
வசையில் வான்றிணைப் புரையோர்
கடுப்பொடு
விருந்துண் டெஞ்சிய மிச்சில்
பெருந்தகை
நின்னோ டுண்டலும் புரைவதென்
றாங்கு
அறம்புணை யாகத் தேற்றி"

எனவரும் குறிஞ்சிப் பாட்டின் கண்

"வித்து மிடல் வேண்டுங்
கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்"

என்னுந் திருக்குறட் பாட்டின் சொலும் பொருளும் எடுத்தாளப் பட்டிருத்தல் காண்க.

கல்லாடனார் பாடல் அகம் 113

"காப்புக் கைக்நிறுத்த பல்வேற்
கோசர்
இளங்கட் கமழும் நெய்தலஞ்
செறுவின்
வளங்கெழு நன்னாடன்ன
வென்தோள் மணந்து
அழுங்கல் மூதூர் அலரெடுத்
தரற்ற
நல்காது துறந்த காதலர்
என்றும் ....
அறாஅது றை அயிர்மணற்
படுகரைப் போகி
சேயரென் றவிற் சிறுமை
யுற்ற வென்
கையறு நெஞ்சத் தெவ்வம்
நீங்க
அழாஅல் உறைதலும் உரியம்
பராரை
அலங்கலஞ் சினக்குடம்பை
புல்லெனப்
புலம்பெயர் மருங்கிற்
புள்ளெழுந் தாங்கு
மெய்யிவ ணொழியப் போகியவர்
செய்வினை மருங்கிற் செலீஇயர்
என்னுயிரே"

எனும் அகப்பாட்டினுள்,

"குடம்பை தனித்தொழியப்
புட்பறந்தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு"

எனுந் திருக்குறட் பாவின் கருத்தை எடுத்தமைத்திருக்கும் திறம் ஒரு விருந்தாகும். "குடம்பை புள்" "மெய்யிவ ணொழியப்புள் எழுந்தாங்கு" எனுஞ் சொற்றொடர்கள் வள்ளுவரின் கருத்தை வலியுறுத்தி நிற்றல் காண்க. இத்திருக்குறளுக்குரை விரித்தபரிமேலழகியார் "குடம்பையெனுஞ் சொற்குக் கூறிய 'முட்டை' யெனும் பொருள், வள்ளுவர் கருத்துடன் பெரிதும் மாறுபட்டதொன்றாதல், தேற்றம்,

ஆலத்தூர் கிழார் பாட்டு புறம் 34

"ஆன் முலை யறுத்த அறனில்
லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத்
தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை
யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயும்
உளவே
நிலம்புடை பெயர்வ தாயினும்
ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி
யில்லென
அறம்பா டின்றே ஆயிழை
கணவ"

எனும் புறப்பாட்டினுள்,

"எந்நன்றி கொன்றார்க்கு
முய்வுண்டாம் உய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

எனுந் திருக்குறட் கருத்தமைந்து கிடந்தணி செய்கின்றது. நல்லிசைப் புலவராகிய ஆலத்தூர் கிழார் இப்பாட்டின்கண் திருக்குறளின் தனிச் சிறப்பை "அறம்பாடின்றே" எனும் சொற்றொடரினால் கனி விளக்குகின்றார். திருக்குறளை அறநூலெனச் சிறந்தெடுத்துக் கிளந்த பெருமை ஆலத்தூர் கிழார்க்கே யமைந்த தனி உரிமையாகும்:

கடலுள் மாய்ந்த இளம்பெரு வழுதி பாட்டு புறம் 182

"உண் டாலம்ம இவ்வுலகம்
இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும்
இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே
முனிவிலர்
துஞ்சலு மிலர் பிறர் அஞ்சுவ
தஞ்சிப்
புகழெனின் உயிருங்கொடுக்குவர்
பழியெனின்
உலகுடன் பெறினும்
கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர்
உண்மையானே"

எனும் இப் புறப்பாட்டினுள்,

"விருந்து புறத்ததாத்
தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்
றன்று"

எனுந் திருக்குறளும்,

"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை
அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்"

எனுந் திருக்குறளும், எடுத்தாளப்பட்டிருத்தல் காண்க.

(வரும்)

விளம்பரம்

சில தினங்கட்கு முன்னர்ச் சமாதியடைந்த நயினார்தீவுச் சாமியெனப்படும் முத்துக்குமாரசாமியார் முயற்சியால் அமைத்த நயினார்தீவுச் சமுத்திர சங்கமமாகவுள்ள தீர்த்தக்கேணியைச் சொல்லியும், மேற்படி சாமியாரின் சமாதிக் கட்டடத்தைச் சொல்லியும் சிலர் பொருள்தண்டுதற்கு முற்பட்டிருக்கிறார்களென அறிகிறோம்; அப்படி வருபவர்களிடத்தில் ஒருசதமேனுங் கொடுக்கவேண்டா மெனவும் குறித்த கேணித் திருப்பணி சமாதித்திருப்பணி யென்னுமிவைகளை திருவுளத்து நடத்தும் நோக்கமாக ஒரு சபை விரைவிற் கூட்டியபின் விளம்பரஞ்செய்யப்படு மெனவும், அதன்பின்னரே அன்பர்கள் குறித்த திருப்பணிகளின் பொருட்டுப் பணமுதவிப் பற்றுச்சீட்டுப் பெறுதல் முறையாகு மென்வும் இதனால் தெரிவிக்கிறேன்.

நா. அமிர்தலிங்கர்,
ஓட்டுமடம்ரோட், வண்-மேற்கு.

N 225 4, 8-2-49.

கந்தசாமி வைத்தியர் அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். கெடுகாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத் தடிப்பு சீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பணிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மல சலக்கட்டுநீக்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற்களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

கால் ருத்தல் விலை ரூப 5-00

வி. பி. பி. யில் அனுப்புவோம்.
வெளிநாட்டிற்கு வி. பி. பி. இல்லை

விலாசம்:

ஆயுள்வேத
சிவசோதி மெடிக்கல்ஹோல்
— வல்வெட்டித்துறை — செ
— கடித

ஆங்கில தமிழ் எஸ். எஸ். ஸி. (S. S. C) வகுப்பு

சைவ சமயபாட நூல்கள்

1. **திருவருட் பயன்**
   பேராசிரியர் சு. சிவபாதசுந்தரம் அவர்களெழுதியவிரிவுரையுடன் } விலை சதம் 75 (அணா 12)
2. **சைவத் திருநெறித் தோத்திரத் திரட்டு**
   விலை சதம் 75 (அணா 12)
3. **திருக்குறள் 10 (25—35) அதிகாரங்கள்**
   பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை தொகுத்த பதவுரை. கருத்துரை, விசேடவுரை, நூலாசிரியர் வரலாறு என்னுமிவற்றோடு ஆங்கில மொழி பெயர்ப்புஞ் சேர்ந்தன. .... விலை சதம் 75 (அணா 12)
4. **சமயகுரவர், சந்தானகுரவர், சரித்திரச் சுருக்கம்**
   மேற்படி பண்டிதர் தொகுத்தெழுதியது விலை சதம் 75

சைவப்பிரகாச யந்திரசாலை
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். } மனேஜர்

சலரோகம்

அப்ரக் செந்தூரம் **கைகண்ட மருந்து**

புதுக்கோட்டைத் தலைமை வைத்திய அதிகாரியும், சுகாதார உத்தியோகத்தருமாகிய ரூவ்சாகிப் Dr M. G. இராமச்சந்திரராவ் தெரிவிப்பதாவது:

"இம்மருந்தை ஒரு சாய்புவுக்குக் கொடுத்தபோது 15 நாட்களில் நீரிற் சர்க்கரைச் சத்து அறவே நீங்கிவிட்டது."

20 வேளை 10 நாள் மருந்து ரூபா 10

நோய்வு துர்மல் கசத்துக்கு சொர்ணகல்பம் ¼ தோலா ரூபா 8—50

Dr. K. S. பரிபூரணநந்தா
Regd. Medical Practitioner, (Madras)
349, நாவலர் ரோட்டு :: :: யாழ்ப்பாணம்

Std 4 12-11—12-6-49

இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூபா	4, 500, 000, 00
கொடுக்கப்பட்ட வேதனம்	,,	3, 000, 000, 00
சேமநிதி	,,	2, 600, 00, 000

தலைமைக்காரியாலயம்:- பிரின்ஸ்ரல்வீதி, கொழும்பு.
நியூயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ரஸ்ற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ் வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை,(கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழையநகரமண்டபம்),வதுளை மட்டக்களப்பு.
யாழ்ப்பாணக்கிளைக்காரியாலயம்:-242ஆஸ்பத்திரிரோட்,யாழ்ப்பாணம்

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்து கொடுக்கின்றது.

நடைமுறைக் கணக்கு: இலங்கையில் (திருக்கோணமலை வதுளை மட்டக்களப்பு ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப்பெற்றுக் கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்: ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி அதற்கு வருடமொன்றுக்கு 1½ விகிதம் கேட்டபோது திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு: இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்: அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று: இதற்கான ஏஜெண்டுகள் உலகெல்லாம் உண்டு.

பிறநாட்டுவிவகாரப்பகுதி: ஜீ.ஓ.எச்.கட்டிடம், யோர்க்வீதி,கொழும்பு.

இந்தியா, மலாய் நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு

Std. 541-8-48—30-7-49.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. P. KANDIAH, F. I. S. A. (Lond) residing at 245. Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa, Press, Vannarponnai, Jaffna, on Tuesday February 8, 1949